பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 05 | வியாழக்கிழமை | 21.12.2023 | அதிர்வு 142

## வடக்கில் கனமழையால் 19 ஆயிரம் பேர் பாதிப்பு!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை 6 ஆயிரத்து 213 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 370 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர்கள் 05

# மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்க உட்பட 4 பேரின் பெயர்கள் பரிந்துரை



"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா உட்பட நால்வரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இதுவரை உத்தியோகபூர்வ தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேசிய தேர்தல்களில் நாங்களே ஆட்சியமைப்போம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,


"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாட்டை சிறந்த முறையில நடத்தினோம். திட்டமிட்ட வகையிலான முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் அனைத்தும் 05

# தமிழ் எம்.பிக்களுடன் ரணில் இன்று சந்திப்பு

## வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று தெரிவித்து விக்கி புறக்கணிப்பு



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று அழைப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** 06



## இந்தியாவின் புதிய தூதர் நேற்று இலங்கை வருகை



இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

அவர் ஓரிரு நாள்களுக்குள் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய கோபால் பாக்லே, 05




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று தமிழ் எம்.பிக்களுடன் நடத்தவுள்ள கலந்துரையாடலில் தமிழர் தரப்பு, ஜனாதிபதிக்கு சமதையாக நின்று பிடித்து, விடயங்களுக்குப் பதில் அளித்துக் கையாளுமா என்பதைக் கூட்டத்தின் போதுதான் பார்க்க வேண்டும்.

இன்றைய கூட்டத்தில் சுமந்திரன், ஸ்ரீதரன், விக்னேஸ்வரன் போன்றோர் பங்குபற்றப் போவதில்லை 06

# டெங்கு நோய் பரவ ஏதுவான சூழலுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் எச்சரிக்கை



**யாழ்ப்பாணம், டிச.21**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்பாக சகல நிறுவனத் தலைவர்கள் மற்றும் பொது மக்களுக்கும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் அவசர செய்தியொன்றை விடுத்துள்ளார்.**

**அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 4 வாரங்களாக அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். அண்மையில் 27 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுகாதாரத் துறை தம்மாலான முழு வீச்சில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும் பொதுமக்களின் பங்களிப்பு மிக அவசியமாக உள்ளது. கடந்த 3 நாள்களாகக் கொழும்பில் இருந்து வருகை தந்த பூச்சியியல் ஆய்வுக் குழுவினரால் பல நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் டெங்கு நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டுள்ளன. இது எழுமாறாக செய்யப்பட்ட ஆய்வு. எனவே, யாழ். மாவட்டம் முழுவதுமாக இது தான் நிலைமை என ஊகிக்க முடிகின்றது.

எனவே, சகல நிறுவனத் தலைவர்களுக்கும் 3 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உடனடியான துப்பரவுப் பணிகளை மேற்கொண்டு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அகற்றுவதுடன் இத்துடன் கள நிலைமையை வாராந்தம் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் நுளம்பு குடம்பிகள் இனங்காணப்படும் நிறுவனங்களுக்கு எதிராகத் தொற்று நோய் பரவ ஏதுவான சூழல் உள்ளதாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்க சுகாதார வைத்திய அதிகாரிகளையும் பொலிஸாரையும் கோரியுள்ளேன்.

இது தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் மாகாண சுகாதார சேவைகள் பாளிப்பாளர் பணிமனையின் இலக்கமான 0761799901 இற்குத் தொடர்பு கொள்ளலாம். – என்றுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே பேராதரவு

## பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிட வேண்டும். அவருக்கு நான் நிச்சயம் ஆதரவு வழங்குவேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் அவசியம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும். நாம் ஜனாதிபதி பக்கம் நிற்போம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் மோதல் இல்லை. தற்போதைய ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் வாக்களித்தனர்.

நாட்டில் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடியும் என்ற நம்பிக்கையிலேயே 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவு வழங்கினர்.

நான் முக்கிய பதவியை வகிப்பலாம். நெருக்கடி நிலைமை என்ன என்பது புரியும். எனவே, ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வரவேண்டும்." – என்றார்.

# யாழில் 15 பேர் கைது!




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிச.21

யாழ்ப்பாணம், கொக்குவில் – நந்தாவில் பகுதியிலும், யாழ். தனியார் பஸ் நிலையப் பகுதி மற்றும் பாடசாலைக்கு அருகில் என கடந்த இரண்டு நாள்களில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கஞ்சா, ஹெரோயின், போதை மாத்திரை என்பவற்றுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கைது செய்யப்பட்ட 15 பேரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைதான 15 பேரில் 6 பேர் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சூறாவளி அல்லது சுனாமி அடித்தாலே தவிர தமிழரசு மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்

## சிரேஷ்ட துணைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உறுதி

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடும், புதிய தலைவர் தெரிவும் திட்டமிட்டபடி நடைபெறும் என கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 18 ஆம் திகதி எங்களுடைய கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச் சபைக் கூட்டமும் புதிய தரைவர் உள்ளிட்ட நிர்வாகத் தெரிவும் இடம்பெற இருக்கின்றன.

ஆனால் எந்தக் காரணம் கொண்டும் கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு அல்லது பொதுச் சபைக் கூட்டம் ஒத்தி வைக்கின்ற எண்ணத்தில் கடந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் இல்லை. ஆகவே தெரிவு என்பதில் தெளிவாகவே நாங்கள் இருக்கிறோம்.

மாற்று எண்ணத்திலும் எவரும் இல்லை. தேசிய மாநாட்டுக் கூட்டத்தை குறிப்பிட்ட திகதியில் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சகலரும் உறுதியாக இருக்கின்றனர்.

ஆகையினாக் திட்டமிட்டபடி நிச்சயமாக இந்தக் கூட்டம் நடைபெறும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதில் தலைவர் தெரிவும் நடைபெறும். அந்தத் தெரிவில் போட்டி



இருக்குமா, இல்லையா என்பது குறித்து எல்லாம் எனக்கச் சொல்லத் தெரியவில்லை.

ஆனால் நிச்சயமாகத் தலைவர் உள்ளிட்ட நிர்வாகத் தெரிவு நடக்கும். இவை நடைபெறும் வாய்ப்புக்கள் 90 வீதம் இருக்கின்றன.

எனினும் வேறு ஏதும் தேசியப் பிரச்சினை, அல்லாவிடின் சூறாவளி அல்லது சுனாமி அடித்தால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே கூட்டமும் தெரிவுகளும் அறிவிக்கப்பட்டபடி நிச்சயம் நடைபெறும். – என்றார்.



# மன்னார் அரச அதிபராக சனியன்று பதவியேற்கின்றார் கனகேஸ்வரன்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.21

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக சனிக்கிழமை காலையில் பதிவியேற்கின்றார்.

இவர் 1974-08-14இல் சாவகச்சேரியில் பிறந்து, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலத்தில் கல்வி கற்று 1996இல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு தேர்வாகி, 2000ஆம் ஆண்டு புவியியல் சிறப்பு பட்டம் பெற்றார்.

1998முதல் 2003 செப்ரெம்பர் வரை கொடிகாமம் போகட்டி அ.த.கா. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 2003 முதல் 2004 ஓகஸ்ட்வரை நிர்வாக சேவைக்கான பயிற்சியில் ஈடுபட்டார்.

2004- ஒக்டோபர் முதல் 2015 ஆண்டு மே மாதம் வரையில் தொழில் திணைக்களத்தின் பிரதித் தொழில் ஆணையாளராகப் பணியாற்றினார்.

2015 ஜூன் முதல் 2019 செப்ரெம்பர் வரையில் மருதங்கேணிப் பிரதேச செயலாளராகவும், 2019 ஒக்டோபர் முதல் 2019 டிசம்பர் வரையில் யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபராகவும் பணியாற்றினார். 2019 டிசம்பர் 16 முதல் 2023 நவம்பர் 21 வரையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராக பணியாற்றிய சமயம் நிர்வாக சேவை விசேட தரத்திற்குத் தேர்வாகி 2022 நவம்பர் 22 முதல் தற்போது வரையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக பணியாற்றுகின்றார்.

இந்த நிலையில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் மன்னார் மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்கும் வகையில் இன்று வியாழக்கிழமை அவருக்கு நியமனக்கடிதம் வழங்கப்படவுள்ளது.


## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



"தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

## சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# 16 வயதுக்குட்பட்ட 5,000க்கும் மேற்பட்ட சிறுமிகள் மீது அவர்களின் இணக்கத்துடனேயே பாலியல் துஷ்பிரயோகம்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



இலங்கையில் கடந்த நான்கு ஆண்டுகளில் 16 வயதுக் குட்பட்ட 5,000க்கும் மேற்பட்ட சிறுமிகள் சொந்த விருப்பத் தின் பேரில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக் கப்பட்டுள்ளனர் என சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள் ளது.

இதன்படி, 2018ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை நாடு முழுவதிலும் உள்ள 16 வயதுக்குட்பட்ட சிறுமி கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட 6307 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் பாலித பண்டார சுபசிங்க இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதில் 5,055 முறைப்பாடுகளில் சிறு மிகளின் சம்மதத்துடன் பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 17 பொலிஸ் பிரிவுகளில் 16 வயதுக்குட்பட்ட 132 சிறுமிகள் கடந்த மூன்று வருடங்களாக வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் சொந்த விருப்பத்தின் போறில் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியர் பாலித பண்டார சுபசிங்க தெரிவித்தார்.

இதன்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் 15 சிறுமிகள் மட்டுமே பலவந்தமாக பலாத்காரம் செய்யப்பட்டனர் எனச்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மொட்டுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொய்யாக்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேசிய தேர்தல்களை எதிர்கொள்ள கட்சி என்ற ரீதியில் நாங் கள் தயாராகவுள்ளோம்.

பொதுஜன பெரமுன தலைமையி லான அரசு வரிச் சலுகை வழங்கிய தால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுக் கொண்டு பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்கள்.

ஆனால், தற்போது வரி அதிகரிப்புக்கு எதிராக விரிவுரையாளர்கள் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுகின்றார் கள். வரி கொள்கை தொடர்பில் கற்றவர் கள் உறுதியான நிலைப்பாட்டை அறி விக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தற்போது மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின் றன. பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் தொடர்பில் உத்தியோக பூர்வ தீர்மானங்கள் ஏதும் அறிவிக்கப்பட வில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா உட்பட நால்வரின் பெயர் ஜனா திபதி வேட்பாளராகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. ஆனால், இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. கட்சியின் செயற் குழுவில் கலந்துரையாடி வெகுவிரை வில் உறுதியான தீர்மானத்தை அறிவிப் போம்.

அரசு நெருக்கடிக்குள்ளாகக் கூடாது என்பதற்காகவே வட் வரிக்கு ஆதரவாக வாக்களித்தோம். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசு செயற்பட்டால் அதற்கு எதிராகச் செயற்படுவோம்." - என்றார்.

## வடக்கில் கனமழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் தொடர் மழை காரணமாக வடக்கின் 5 மாவட்டங்களும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இதில் உச்சபட்சமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 715 குடும்பங்க ளைச் சேர்ந்த 8 ஆயிரத்து 572 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட் டத்தில் 2 ஆயிரத்து 372 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 904 பேர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதேநேரம் மன்னார் மாவட்டத்தில் 628 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயி ரத்து 271 பேர் பாதிப்படைந்துள்ள னர்.

வவுனியா மாவட்டத்தில் 279 குடும் பங்களைச் சேர்ந்த 878 பேரும், யாழ்ப் பாணம் மாவட்டத்தில் 219 குடும்பங்க ளைச் சேர்ந்த 745 பேரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதற்கமைய வடக்கு மாகாணத்தில் இதுவரை 6 ஆயிரத்து 213 குடும்பங்க ளைச் சேர்ந்த 19 ஆயிரத்து 370 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று வடக்கின் 5 மாவட்டங்களின் அரச அதிபர்களும் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவின் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூது வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்கான புதிய தூதுவராக இந்தியாவின் சிரேஷ்ட இராஜ தந்திரியான ஶ்ரீசந்தோஷ் ஜா நியமிக்கப் பட்டுள்ளார். இவர் பெல்ஜியத்துக்கான இந்தியத் தூதுவராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பது உறுதியாகி உள்ளது.

சுமந்திரன் நேற்றே வெளிநாடு சென்று விட்டார்.

ஸ்ரீதரன் எம்.பி. வன்னியில் ஏற்பட்டுள்ள பெருவெள்ள நிலையில் மக்களுக்கான அவசர மீட்பு – நிவாரணப் பணிகளில் முழுமையாக மூழ்கியுள்ளார். அதை இடையில் விட்டு விட்டு அவர் இன்று கொழும்பில் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக கொழும்புக்குச் செல்லும் வாய்ப்புகள் பெரும்பாலும் இல்லை. நீதியரசர் விக்னேஸ்வரன் ஏற்கனவே கூட்டத்தில் தான் பங்குபற்ற மாட்டார் என்பதை ஜனாதிபதி தரப்புக்கே எழுத்தில் அறிவித்து விட்டார். சித்தார்த்தனும் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு இல்லை என்றே கூறப்படுகின்றது.

கஜேந்திரகுமார் வழமைக்கு மாறாக இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினால் ஜனாதிபதி ரணிலின் நகர்வுகளுக்கு சரியான பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கலாம். ஆனால் கஜேந்திரகுமார் கலந்து கொள்வாரா என்பது தெரியவில்லை.

ரெலோ தரப்பில் கலந்து கொண்டு தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் குறித்து வலியுறுத்தல்கள் முன்வைக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் இன்றைய கூட்டத்தில் எப்படியும் சம்பந்தன் ஐயாவைப் பங்குபற்றும்படி சாணக்கியன் எம்.பி. நேற்று அவரைத் தொடர்பு கொண்டு வற்புறுத்தி இருக்கின்றார். சம்பந்தன் ஐயா இன்றைய கூட்டத்திற்கு எப்படியும் வருவார் என்ற செய்தி அவரின் மகன் மூலம் சாணக்கியனுக்கு உறுதிப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

சம்பந்தன் ஐயா இன்றைய கூட்டத்தில் பங்குபற்றுவார் எனின், அவரது இயலுமை தொடர்பாக கடந்த சில வாரங்களாக வெளியாகும் செய்திகள் – சந்தேகங்கள் – பேச்சுகளுக்கு – பதில் தருவதாக அது அமையும் என எதிர்பார்க்கலாம்.

## தமிழ் எம்.பிக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலுக்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் தான் பங்கேற்கமாட்டேன் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

“13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற மிக முக்கியமான விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் ஏற்கனவே வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதனை அமுல்படுத்தாமல் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடுவதன் மூலம் எந்தவொரு பயனுள்ள நோக்கமும் நிறைவேறாது என்பதே எனது கருத்தாகும். ஆகவே, இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நான் கலந்துகொள்ளப்போவதில்லை.”–என்று விக்னேஸ்வரன் எம்.பி. அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு அவர் கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நான் 24.07.2023 மற்றும் 15.08.2023 ஆகிய திகதிகளில் ஜனாதிபதியை கலாநிதி கே.விக்னேஸ்வரனுடன் சந்தித்தேன்.

ஜனாதிபதியுடனான இரண்டாவது சந்திப்பின் போது, கீழ்க்கண்டவாறு ஐந்து நிபுணர்களை உள்ளடக்கிய அதிகாரப் பகிர்வுக்கான குழுவொன்றை நியமிப்பது பற்றி அவர் சாதகமாகப் பேசினார்.

அரசமைப்பின் 154 டி பிரிவின் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதியால் குழுவை நியமிக்க முடியும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். சட்டப்பிரிவு 154 எல் இன் கீழ் பிரகடனம், சட்டங்கள் ஒப்புதலுக்குத் தயாராக இருக்கும் போது மட்டுமே தேவைப்படும். செப்டெம்பர் 1, 2023 இற்குள் குழு செயற்படும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். இது நடக்கவில்லை. இப்போது டிசம்பர் 2023. 13 ஆவது திருத்தம் முழுவதுமாக அமுல்படுத்தப்படும் என்று எதிர்பார்த்தவர்கள் இப்போதைக்கு ஏமாற்றம் மற்றும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

13ஆவது திருத்தத்தின் கீழ் குறைந்தபட்சம் 100 வரைவு சட்டங்களைத் தயாரிப்பதே குழுவின் ஆரம்பப் பணியாகும். இந்தப் பணி சுமார் 6 மாதங்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 154 எல் பிரிவின் கீழ் ஒரு பிரகடனம் செய்யப்பட்ட பின்னர், நிச்சயமாக அந்த வரைவு சட்டங்களின் ஒப்புதல் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மத்திய அரசால் தவறாகக் கையகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளின் விடயங்களை மீளப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நிர்வாக நடைமுறைகள் குறித்தும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கும் இக்குழு வழிவகைகளையும் வழிமுறைகளையும் வகுத்துரைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. மாவட்ட நிர்வாகங்களை மாகாணங்களுக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் குழுவின் ஆலோசனை ஜனாதிபதிக்கு அவசியமானது. ஜனாதிபதி உறுதியளித்தபடி இவை எதுவும் நடைபெறவில்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற மிக முக்கியமான விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்தாமல் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடுவதன் மூலம் எந்தவொரு பயனுள்ள நோக்கமும் நிறைவேறாது என்பதே எனது கருத்தாகும்.

ஆகவே, 2023 டிசம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நான் கலந்துகொள்ளவில்லை என்பதில் நான் வருந்துகின்றேன்.” – என்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விக்கியின் விபரீத விளையாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று கூட்டியுள்ள - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான - சந்திப்பில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திப் பிரிவுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் இளங்கோவன், மேற்படி ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு அழைப்பு அனுப்பி இருந்தார். அதற்கு அளித்த பதிலில் தாம் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அது அவரது தீர்மானம். முடிவு. அதனை நாம் விமர்சிக்கப் போவதில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் போக்கை நம்பி, அவருடன் சேர்ந்து பணியாற்றி எதனையும் சாதிக்கலாம் என்று கருதி, விடயத்தில் இறங்கிய அவரது முயற்சிக்குக் கிடைத்த பலனை கணக்கிட்டு, இந்த முடிவை அவர் எடுத்திருக்கக் கூடும். அதையும் நாம் தவறு என்று கூறப் போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருங்கிப் பல அரசியல் கருமங்களைச் சேர்ந்து முன்னெடுத்த தமிழரசுக் கட்சிப் பிரமுகர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூட "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடது புறம் திரும்புவதாக சிக்னலைப் போட்டுவிட்டு, வலது புறம் வாகனத்தைத் திருப்புபவர்" என்ற சாரப்பட ரணிலின் பண்பியல்பை - நடவடிக்கைகளை - விமர்சித்து இருந்தார். அந்த அனுபவத்தை நீதியரசர் தாமும் பட்டுத் தெளிந்திருக்கின்றார் என்பதை சந்திப்புக்கு போவதில்லை என்று தெரிவித்து, அதை விவரமாக விளக்கி, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இளங்கோவனுக்கு தாம் அனுப்பிய கடிதத்தில் அவரே தெளிவுபடுத்தி இருக்கிறார்.

அந்தக் கடிதம் நீதியரசர் விக்னேஸ்வரன் இன்னொரு ஆபத்தான - விபரீதமான - அரசியல் விளையாட்டையும் நடத்தி இருக்கின்றார் என்ற அதிர்ச்சித் தகவலையும் அம்பலப்படுத்தி உள்ளது.

இயங்காத வடக்கு மாகாண சபையை ஐவர் கொண்ட அதிகாரப் பகிர்வுக்கான நிபுணர் குழு ஒன்றின் மூலம் இயங்க வைக்கும் யோசனை ஒன்றைத் தாம் முன்வைத்த போது அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணங்கினார் என்று குறிப்பிடும் விக்னேஸ்வரன், அதற்கு அப்பால் அதிர்ச்சி விடயம் ஒன்றை வெளிப்படுத்தி இருக்கிறார்.

மேற்படி குழு மூலம் மாகாண சபைக்குரிய சுமார் நூறு சட்ட வரவுகளை ஆறு மாதங்களுக்குள் தயாரித்து, ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அவற்றை அங்கீகரித்து, நடைமுறைப்படுத்தச் செய்யும் ஆபத்தான சதித் திட்டத்துடன்தான் நீதியரசர் விக்னேஸ்வரன் காய்களை முன்நகர்த்தி இருக்கின்றார் என்ற உண்மை இந்தக் கடிதத்தில் அம்பலமாகி இருக்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையே மாகாணத்துக்குரிய நியதிச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் கொண்டது. அந்த அதிகாரத்தை ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் ஆலோசனைக் குழு மூலம் ஜனாதிபதியே முன்னெடுக்கும் ஒரு தவறான சட்ட வியாக்கியானத்துக்கும், நடவடிக்கைக்கும் விக்னேஸ்வரன் நாசூக்காகத் திட்டமிட்டுத் தூண்டியிருக்கின்றார் என்ற உண்மையே இப்போது அம்பலமாகியிருக்கின்றது.

அதாவது, 13 ஆம் திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட நியதிச் சட்ட உருவாக்க அதிகாரத்தை ஜனாதிபதிக்கும், அவரினால் நியமிக்கப்படும் ஆலோசனை சபைக்கும் தாரை வார்க்கும் ஒரு சட்ட முறையற்ற செயற்பாட்டிற்கு விக்னேஸ்வரனும் சேர்ந்து பிள்ளையார் சுழி போட்டிருக்கின்றார் என்ற சதித்திட்டமே இப்போது வெளியாகி இருக்கின்றது.

ஏற்கனவே வடக்கு ஆளுநராக இருந்த ஜீவன்தியாகராஜா மாகாணசபைகளின் நியதி சட்ட உருவாக்க அதிகாரத்தைத் தனது கைகளில் எடுத்த போது, அதற்கு சரியான சூடு வைத்த உயர்நீதிமன்றம், அது மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகளின் விவகாரம், அதனை ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் முன்னெடுக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்திருந்தது. அதன் அடிப்படையில் தமது நியதிச் சட்ட உருவாக்க வர்த்தமானியை அதே ஆளுநர் திரும்பக் கை வாங்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

இப்போது அந்த வேலையை இன்னொரு வடிவத்தில் முன்னெடுக்க முயன்றிருக்கிறார் விக்னேஸ்வரன். இது, 13 ஆம் திருத்தத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபையின் அதிகாரங்களை, மீளப் பிடுங்கி ஜனாதிபதியிடம் கையளிக்கும் ஆபத்தான நடவடிக்கை. அதிகாரப் பகிர்வுக்கு மாறாக, பகிரப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதி பிடுங்கி எடுத்துத் தாமே பிரயோகம் செய்யும் ஆபத்தான - மோசமான - வேலைக்கு விக்னேஸ்வரனும் சேர்ந்து வழிகாட்டித் துணை போக முயன்றிருக்கிறார்.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பிடுங்கி எடுப்பதில் குறியாக இருக்கின்றது பேரினவாதம். அதற்கு யோசனை சொல்லித் துணை போகும் விக்கியின் வேலை 'வீடெரிக்கும் இராசவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரியின் செயலுக்கு' ஒப்பானதாகும்.

நீதியரசருக்கு ஏன் இந்தக் குசும்புத் தன வேலை?

# ஜனநாயகத்தின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது: எம்.பிக்கள் இடைநீக்கம் குறித்து சோனியா கருத்து



141 எம்.பி.கள் இடைநீக்கம் செய்யப்பட்டமை குறித்து பா.ஜ.க. அரசை கடுமையாக விமர்சித்துள்ள காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி, 'ஜனநாயகத்தின் கழுத்து நெரிக்கப்பட்டு விட்டது' என்று சாடியுள்ளார்.

காங்கிரஸ் நாடாளுன்ற உறுப்பிர்கள் கூட்டத்தில், எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது குறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி,

"இந்த அரசினால் ஜனநாயகத்தின் கழுத்து நெரிக்கப்பட்டுவிட்டது. இதற்கு முன்பு நியாயமாக கோரிக்கை எழுப்பியதற்காக இவ்வளவு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மொத்தமாக இடைநீக்கம் செய்யப்பட்டது இல்லை. கடந்த 13 ஆம் திகதி நடந்தது அசாதாரணமான நிகழ்வு. இரண்டு நபர்கள் பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து குதித்து வண்ணப் புகை குப்பிகளை வீசியது மிகப்பெரிய பாதுகாப்பு அத்துமீறல். அச்சம்பவத்துக்கு பதிலளிக்கப்பட்ட ஆணவப்போக்கினை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

கடந்த 13 ஆம் திகதி நடந்ததை மன்னிக்கவும், நியாயப்படுத்தவும் முடியாது. இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்கவும், நாட்டுப்மக்களுக்கு விளக்கம் அளிக்கவும் பிரதமர் மோடிக்கு நான்கு நாட்களாகியிருக்கிறது. அதுவும் நாடாளுமன்றத்துக்கு வெளியே சம்பவம் குறித்து பேசியிருக்கிறார். இதன்மூலம் அவர் நாடாளுமன்றத்தின் கண்ணியத்தினையும் நாட்டு மக்களையும் அலட்சியம் செய்வது தெளிவாகத் தெரிகிறது. இந்தநேரத்தில் பா.ஜ.க. எதிர்க்கட்சியாக இருந்திருந்தால் எவ்வாறு எதிர்வினையாற்றியிருக்கும் என்பதை நான் உங்களின் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்றத்தில் கடந்த 13 ஆம் திகதி நடந்த அத்துமீறல் சம்பவம் குறித்து நான்கு நாட்களுக்கு பின்னர் பிரதமர் நரேந்திர மோடி இந்தி மொழியில் வெளியாகும் தினசரிக்கு அளித்த பேட்டியில்,

"நாடாளுமன்ற அத்துமீறல் தீவிரமான பிரச்சினை. இது மனவேதனையும் கவலையும் அளிப்பதாக உள்ளது. இதை குறைத்து மதிப்பிடவோ புறந்தள்ளவோ முடியாது. இந்த சம்பவத்துக்கு பின்னால் இருப்பவர்கள் யார், அவர்களுடைய நோக்கம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். அதேநேரம் இந்த விவகாரத்தை சர்ச்சையாக்கக் கூடாது. நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

இந்த விவகாரத்தை மக்களவைத் தலைவரும் தீவிரமாக எடுத்துக் கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதேநேரம் விசாரணை அமைப்புகளும் தீவிர விசாரணை நடத்தி வருவதுடன், இதில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றன" என்று தெரிவித்திருந்தார்.

# உலக பொருளாதார சக்தியாக உருவெடுக்கின்றது இந்தியா!

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு



உலக பொருளாதாரத்தில் முக்கி யப் பங்களிப்பாளராக இந்தியா உருவெடுத்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த ஆண்டுக்கான (2023) ஆண்டறிக்கை வெளியிடப்பட்ட போதே இந்த விடயம் சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், "நிகழாண்டில் உலகில் மிக வேக மாக வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா இடம் பெற்றிருப்பதற்கு, கவன மாகத் திட்டமிடப்பட்ட பொருளாதார கொள்கைகளே காரணம்.

கொரோனா பெருந்தொற்றிலிருந்து மீண்டெழுந்து, உலக பொருளாதார வளர்ச்சியில் முக்கிய சக்தியாக இந்தியா மாறியுள்ளது.

கடந்த 2022-2023 நிதியாண்டில் இந்தியாவின் பணவீக்கம் ஏற்றம் இறக்கத்துடன் இருந்தாலும் தற்போது அது நிலையாக காணப்படுகிறது.

டிஜிட்டல் மயமாக்கல், உள்கட்டமைப்பு உள்ளிட்ட முக்கியத் துறைகளில் இந்தியா மேற்கொண்ட சீர்திருத்தங்கள் மூலமாகவே இந்தியா பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்து வருகிறது.

தற்போது இந்தியாவின் வேலை வாய்ப்பு நிலைமையும் கொரோனாவுக்கு முந்தைய நிலையை எட்டியுள்ளது.

நிதிப் பற்றாக்குறை குறைந்திருந்தாலும், அரசுக்கான கடன் சுமை அதிகமாகவே உள்ளது, எதிர்பாராத நிதிப் பிரச்னைகளை எதிர்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொளளவேண்டிய நிலையில் இந்தியா இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் அண்மையில் இடம்பெற்ற ஜி 20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகித்தபோது, பல்துறை சார்ந்த கொள்கைகளுக்கு முன்னுரிமை அளித்தலில் இந்தியா முக்கிய கவனம் செலுத்தியமையானது, பிற நாடுகளுக்கும் உதாரணமாக இருந்தது."என கூறியுள்ளது.

மேலும், இந்தியா விரைவான வளர்ச்சியை அடைந்து வருவதாகவும், பிற நாடுகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, உலக பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்களிப்பாளர்களில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது எனவும் நிகழாண்டுக்கான உலக வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு 16 சதவீதத்துக்கும் அதிகமாக காணப்படுகிறது எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் இந்திய பிரதிநிதிக் குழுவைச் சேர்ந்த நட்டா சௌயீரி குறிப்பிட்டிருந்தார்.

# மீண்டும் ஒரு போர் நிறுத்த கோரிக்கை: எகிப்து விரைகிறார் ஹமாஸ் தலைவர்






காசாவில் இடம்பெற்றுவரும் போரை நிறுத்தும் வகையில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே எகிப்திற்கு சென்றுள்ளார்

ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவர் இஸ்மாயில் ஹனியே புதனன்று கெய்ரோவிற்கு வந்து இஸ்ரேலிய அரசாங்கத்திற்கும் ஹமாஸிற்கும் இடையில் ஒரு புதிய போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பேச்சு நடத்தினார் என்று பிரான்ஸ் 24 செய்தி வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பின் ஆதாரத்தை மேற்கோள்காட்டி பிரெஞ்சு செய்தி நிறுவனம், ஹனியேவும் அவரது தூதுக்குழுவும் அங்கு பல சந்திப்புகளை நடத்துவார்கள், குறிப்பாக எகிப்திய உளவுத்துறையின் இயக்குனர் அப்பாஸ் கமெலுடன் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இந்தப்பேச்சுவார்த்தையில் வடக்கு காசா பகுதியில் முற்றுகையை முடிவிற்கு கொண்டு வருதல், அங்கிருந்து படையை மீளப்பெறல், கைதிகள் பரிமாற்றம், போர்நிறுத்தம், மக்களுக்கான உதவிப்பொருள்களை வழங்குதல் ஆகிய விடயங்கள் முக்கிய இடம்பிடிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் மேற்கொண்டு வருகின்றன.

ஹமாஸ் பிடியில் உள்ள பிணைக்கைதிகளை விடுவிக்கவும் போர் நிறுத்தத்துக்கும் இரு தரப்பிடமும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# இஸ்ரேலின் சரக்குக் கப்பல்களுக்கு தடை விதித்தார் மலேசியப் பிரதமர்!

காசாவில் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் இஸ்ரேலுக்கு மலேசிய பிரதமரின் அதிரடி அறிவிப்பு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி இஸ்ரேல் நாட்டுக் கொடியுடன் கூடிய அனைத்து சரக்குக் கப்பல்களையும் தனது துறைமுகத்தில் நிறுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது என மலேசியப் பிரதமர் அன்வார் இப்ராஹிம் அறிவித்துள்ளார்.



“இஸ்ரேலை தளமாகக் கொண்ட கப்பல் நிறுவனத்தின் கப்பல்களை எந்த மலேசிய துறைமுகத்திலும் நிறுத்தப்படுவதையும், அனுமதிப்பதையும் தடுக்க மலேசிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது” என்று பிரதமர் அன்வார் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

“இந்த கட்டுப்பாடுகள் அடிப்படை மனிதாபிமான கொள்கைகளை புறக்கணிக்கும் மற்றும் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான தொடர்ச்சியான படுகொலைகள் மற்றும் அட்டூழியங்கள் மூலம் சர்வதேச சட்டத்தை மீறும் இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு ஒரு பிரதிபலிப்பாகும்” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் இஸ்ரேலில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களை மலேசியாவில் நங்கூரமிடவும் பின்னர் கப்பல்துறை செய்யவும் அரசாங்கம் அனுமதித்ததாக மலேசியப் பிரதமர் குறிப்பிட்டார்.

அத்தகைய முடிவுகள் அனைத்தும் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறந்த புகைப்படக் கலைஞராக எட்டு வயது சிறுமி தெரிவு

இளம் அமெச்சூர் புகைப்படக் கலைஞர்களை அங்கீகரிக்கும் யுகே மற்றும் வேல்ஸில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆர்எஸ்பிசிஏ யங் போட்டோகிராபர் விருதுகள் 2023 இல் எட்டு வயது ஜேமி ஸ்மார்ட் சிறந்த புகைப்படக் கலைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜேமி ஸ்மார்ட், வேல்ஸில் வசிப்பவர். ரோயல் விருதுகளில் சிறந்த புகைப்படக் கலைஞராக எட்டு வயது சிறுமி வெற்றி பெற்றது இதுவே முதல் முறையாகும்.

லிட்டில் ஜேமியின் புகைப்படம் அவரது கூண்டில் உள்ள அவரது செல்ல வான்கோழி ‘ஃபிரடெரிக்’ இன் நெருக்கமான காட்சியைக் காட்டுகிறது.





# புலம்பெயர் சமூகத்தினர் நாட்டின் எதிரிகளல்லர்!

## சாகல ரத்நாயக்க கூறுகின்றார்

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வாழ்வதால் ஒருவரை தீவிரவாதியாகவோ அல்லது இலங் கைக்கு எதிரானவராகவோ கருதிவிட முடியாது என ஜனாதிபதியின் தேசி யப் பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடை பெற்ற சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் தொடர்பான நிகழ்வில் உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளி யிட்ட அவர் –

இலங்கையில் புலம்பெயர்ந்தோர் தொடர்பாக எதிர்மறையான கருத் துக்கள் காணப்படுகின்றன.

புலம்பெயர் தேசத்தின் ஒரு பகுதி யாக ஒருவர் இருப்பதால் அவரை தீவிர வாதியாகவோ அல்லது இலங்கைக்கு எதிரானவராகவோ மாற்ற வேண்டி யதில்லை.

இன, மத வேறுபாடின்றி வேறு நாட்டில் வாழும் எந்தவொரு இலங்கை யரும் புலம்பெயர்ந்த இலங்கையர் களின் ஒரு பகுதியாவர்.

இலங்கையில் இடம்பெற்ற கசப் பான சில வரலாற்று நிகழ்வுகள் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கும் இடையில் தூரத்தை ஏற்படுத்தியுள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்க விரும்பும் புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்கள் அதிகாரத்துவத் தடை களை எதிர்கொள்கின்றனர்.

புலம்பெயர் மக்களை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்துவது அவ சியமாகும். அவர்களின் முதலீட்டை ஊக்குவிக்கும் சூழலை உருவாக்க வேண்டும்.” என்றார்.

இந்நிகழ்வில், வெளிநாடு வாழ் இலங்கை மக்களது விவகாரங்களை கையாள https://oosla.lk/ என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தை சாகல ரத்னாயக்க திறந்து வைத்தார்.



# வாகனம் செலுத்த தகுதியற்றவர்கள் என 250 பேர் அடையாளம் காணப்பட்டார்கள்

பல்வேறு தவறுகளுக்காக பொலிஸ் திணைக்களம் மற்றும் நீதிமன்றங் களினால் கடந்த வருடம் மருத்துவ பரிசோதனைக்காக தேசிய போக்கு வரத்து மருத்துவ நிறுவனத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட சாரதிகளில் 250 பேர் வாகனம் செலுத்த தகுதியற்ற வர்கள் என அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் 2022ஆம் ஆண் டுக்கான செயல்திறன் அறிக்கை யில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 3,989 சாரதிகள் பல்வேறு தவறுகளால் மருத்துவ பரி சோதனைக்காக தேசிய போக்கு வரத்து மருத்துவ நிறுவனத்திற்கு அனுப் பப்பட்டனர்.

இவர்களில் 250 பேர் வாக னம் செலுத்துவதற்கு உடல் மற்றும் மனத் தகுதி இல்லாதவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, இவர்கள் வாகனம் செலுத்துவதற்கு மருத்துவ ரீதியாக தகுதியற்றவர்கள் என தேசிய போக்கு வரத்து மருத்துவ நிறுவனத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.



# இமயமலை பிரகடனத்தை விட 13 ஆம் திருத்தம் சிறந்த தீர்வு!

## அரசிடம் அதனை உலகத்தமிழர் பேரவை வலியுறுத்த வேண்டும் என்கிறார் சந்திரிகா

உலகத் தமிழர் பேரவையின் "இமயமலை பிரகடனம்" வரவேற்கத்தக்கதெனினும், இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வாக அரசமைப்புத் தீர்வே அமையவேண்டும் என்பதை உலகத்தமிழர் பேரவையினர் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அமைதிக்கான மதங்களின் இலங்கை பேரவையின் ஏற்பாட்டில் "அதிகரித்த பரப்புரை சமூக ஈடுபாடு மற்றும் சிறுவர்கள், குடும்பங்கள், சமூகங்களுக்கான நேர்மறையான நடத்தை விளைவுகள் குறித்து கற்றல் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல்" நேற்று முன்தினம் கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும தெரிவிக்கையில் –

"இலங்கையில் 1956 ஆம் ஆண்டிலிருந்து சிறுபான்மையின மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இருப்பினும் நாட்டு மக்கள் எவரும் இனவாதிகளாகவோ அல்லது கடும்போக்குவாதிகளாகவோ இருந்ததில்லை.

மாறாக அரசியல்வாதிகளே தமது அரசியல் சுயலாபங்களுக்காக இனவாதத்தை விதைத்து, இனங்களுக்கு இடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றனர்.

அத்தோடு அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் உடனடியாக முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி கலாநிதி ஜெஹான் பெரேராவும், அவரது தலைமையின்கீழ் இயங்கிவரும் தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்களும் நீண்டகாலமாகப் பல்வேறு விடயங்களைச் செய்துவருகின்றனர்.

இருப்பினும் எமது நாட்டில் இடம்பெற்ற நீண்டகாலப் போரினால் சமூகத்தின் மத்தியில் மிகவும் ஆழமான பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்டு செயலாற்றிவருவோருக்கு அதுசார்ந்த உத்வேகத்தை வழங்குமாறு அவர் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 1956 ஆம் ஆண்டிலிருந்து இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் பதிவாகி வந்திருக்கின்றன. குறிப்பாக சிறுபான்மையின மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

புதிதாக ஆட்சிபீடமேறும் ஒவ்வொரு அரசாங்கமும், அப்போது நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முற்படுகின்ற வேளையில், அதற்கு கடும்போக்குவாதிகளிடமிருந்து எதிர்ப்பு கிளம்பும்.

உண்மையிலேயே நாட்டில் பெரும்பான்மையான மக்கள் போரையோ அல்லது முரண்பாடுகளையோ எப்போதும் விரும்பவில்லை. அவர்கள் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதையே முன்னிலைப்படுத்தி வந்திருக்கின்றனர்.

அவ்வாறிருந்தும் இனங்களுக்கு இடையிலான அமைதி, நல்லிணக்கம் என்பன இன்னமும் சாத்தியப்படாமல் இருப்பதற்கு அரசியல்வாதிகளே காரணமாவர். இனங்களுக்கு இடையிலான பிரச்சினையை தமது தேர்தல் கோஷமாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

எனது தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தனிச்சிங்கள சட்டத்தை அறிமுகப்படுத்திய போதிலும், அதன் பின்னரான காலகட்டத்தில் தமிழ் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, தந்தை செல்வநாயகத்துடன் பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, சமஷ்டிக்கு நிகரான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இருப்பினும் அதனை ஏனைய தமிழ் தலைவர்கள் எதிர்த்தனர்.

அதேபோன்று சில பௌத்த தேரர்களையும் அரசியல்வாதிகள் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

என்னைப்பொறுத்தமட்டில்இலங்கை மக்கள் இனவாதிகளோ, கடும்போக்குவாதிகளோ அல்லர். மாறாக அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்பட்ட சிலரே அவ்வாறு செயற்படுகின்றனர்.

ஏனெனில் நான் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைக்கு சுமூகமான முறையில் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டை முன்னிறுத்தி போட்டியிட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகிய மூன்றிலும் நாம் அதியுயர்

(12ஆம் பக்கம் பார்க்க)



# யாழில் பிறந்து 4 நாள்களான குழந்தை திடீரென உயிரிழப்பு

## உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணத்தில் பிறந்து நான்கு நாள்களேயானா குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

குழந்தையின் உயிரிழப்புக்குக் காரணம் தெரியாத நிலையில், குழந்தையின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் கடந்த 14ஆம் திகதி பெண் ஒருவர் குழந்தை பிரசவித்துள்ளார். இரண்டு நாள்களின் பின்னர் 16ஆம் திகதி வைத்தியசாலையில் இருந்து தாயும் பிள்ளையும் வீடு திரும்பினர்.

அந்நிலையில், 18ஆம் திகதி திங்கட்கிழமை வீட்டில் குழந்தையின் உடல் சிகப்பு நிறமாக மாறியதை அடுத்து , பெற்றோர் குழந்தையைத் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது, அவர்கள் குழந்தையைப் போதனா வைத்தியசாலையில் சேர்க்குமாறு கூறியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

# இமயமலை பிரகடனத்தை விட...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையுடன் வெற்றியீட்டினோம். எனவே இதனூடாக மக்கள் இனவாதிகள் அல்லர் என்பது நிரூபணமாகின்றது.

நான் ஏற்கனவே வாக்குறுதியளித்தவாறு 60 வயதில் அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வுபெற்றதன் பின்னர், தற்போது இனங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு இயங்கி வருகின்றேன். ஏனெனில் நான் எனது நாட்டை நேசிக்கின்றேன்.

அதேபோன்று இவையிரண்டுமின்றி எம்மால் நாடு என்ற ரீதியில் முன்நோக்கிப் பயணிக்கமுடியாது என்பதையும் நான் எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்துகொண்டேன்.

கல்வி, தொழில்வாய்ப்பு என அனைத்திலும் முன்னேற்றத்தை எட்டியிருந்தாலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பட்டியலில் நாம் இன்னமும் பின்னடைவான நிலையிலேயே இருக்கின்றோம். ஏனெனில் எம்மிடமிருந்த அனைத்து வளங்களும் போரில் செலவிடப்பட்டன.

அதனைச் செய்தவர்கள் போர் என்பது எவ்வளவு பெரிய வணிகம் என்பதை அறிந்துகொண்டார்கள். போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இப்போதும் பாதுகாப்புத்துறைக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்படுகின்றது.

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கும் பொலிஸாருக்கு அந்நிதி ஒதுக்கீடு அவசியமெனினும், இராணுவத்தினருக்கு மிகையான நிதியை ஒதுக்கவேண்டியதன் அவசியம் என்ன?

கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் இனரீதியான வன்முறைகளை முன்னிலைப்படுத்தியிருக்காவிடின் அவரால் (கோட்டாபய ராஜபக்ஷ) அத்தேர்தலில் வெற்றியீட்டியிருக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் மாத்திரமன்றி, அதற்கு முன்னர் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளும் இதில் உள்ளடங்குகின்றன. இருப்பினும் இரு வருடங்களுக்குள் அவர்கள் பொது மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகத்தலைவர்கள், ஆசிரியர்கள் உள்ளடங்கலாக சகல துறை சார்ந்த தலைவர்களும் சமாதானத்தை வலியுறுத்தி மக்களிடம் பேசவேண்டும். நான் ஆட்சியிலிருந்தபோது உருவாக்கிய அரசமைப்பு வரைவில் தற்போதைய 13 ஆவது திருத்தத்தை விடவும் பன்மடங்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இருப்பினும் அதனை ஏனைய அரசியல் கட்சிகள் ஆதரிக்கவில்லை. தற்போது உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள் பௌத்த தேரர்களுடன் இணைந்து தீர்வு செயற்திட்டமொன்றை முன்மொழிந்திருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியிருக்கின்றனர். அவை வரவேற்கத்தக்க விடயங்களாகும். இருப்பினும் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக அரசமைப்புத் தீர்வே இருக்கவேண்டும் என்பதை அவர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும்.

அதேபோன்று இப்போது தமிழ் மக்கள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்றனர். ஏற்கனவே மிகத் தாமதமடைந்து விட்டது என்றாலும், இனியேனும் அரசாங்கம் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் விளைவாக சிங்கள பெரும்பான்மையின மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழந்துவிடக் கூடும் என ஜனாதிபதி அச்சமடையத் தேவையில்லை. ஏனெனில் நாட்டு மக்கள் இனவாதிகள் அல்லர்" எனத் தெரிவித்தார்.



# மின்சார வேலியில் யானை பலி விவசாயி அதிகாரிகளால் கைது

சோளம் பயிரிடப்பட்ட பகுதியைச் சுற்றி மின்சார கம்பியை பயன்படுத்தி வேலியிட்டதால் யானை ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 54 வயதான விவசாயி ஒருவர் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கஹடகஸ்திகிலிய அலுவலக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹடகஸ்திகிலிய ரத்மல்கஹவ பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹடகஸ்திகிலிய, நெலுகொல்லக்கடை பிரதேசத்தில் அமைந்துள்ள சோளப் பயிர் செய்கை காணியில் 35 வயதுடைய 8 அடி உயரமான யானை மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தமையையடுத்தே அவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.




# உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளுக்கு தடை

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளை நடத்தவும் அது தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதற்குமான அனுமதி எதிர்வரும் 29 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகிறது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், விரிவுரைகள் உள்ளிட்டவற்றுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள் உள்ளிட்ட வினாப்பத்திரங்களை அச்சிடுதல், அவற்றை விநியோகித்தல், பரீட்சை வினாத்தாள்களின் வினாக்களை வழங்குவதாக அல்லது அதற்கு சமமான வினாக்களை வழங்குவதாக போஸ்டர்கள், பேனர்கள், கையேடுகள் ஆகியவற்றை அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக பிரசாரம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறி செயற்படும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது தமது திணைக்களத்திற்கு அறியத்தருமாறு பரீட்சைகள் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை 2024 ஜனவரி 04 ஆம் திகதி முதல் ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.



# இலங்கையர்களை மீட்பதற்கான பேச்சுக்கு மியன்மார் உள்துறை அமைச்சர் இணக்கம்

மியன்மாரில் பயங்கரவாதிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 56 இலங்கையர்களை மீட்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிக்க அந்த நாட்டு உள்துறை அமைச்சர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இந்த விடயத்தை மியன்மாருக்கான இலங்கை தூதுவர் உறுதி செய்துள்ளார்.

மியன்மாரின் தாய்லாந்து எல்லைக்கு அருகே பயங்கரவாத குழுவொன்றின் சைபர் அடிமைகளாக இலங்கை இளைஞர்கள் சிலர் பலவந்தமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அண்மையில் தகவல்கள் வெளியாகின.

அந்தப் பிரதேசம் கூகுள் வரைபடத்தில் "Cyber Criminal Area" எனப்படும் சைபர் குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மியன்மாரின் மியாவெட்டி நகரில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த பகுதி முழுமையாக பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் காணப்படுகிறது.

தாய்லாந்தில் கணினி துறையில் தொழில்களை பெற்றுத் தருவதாக கூறி அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையின் இளைஞர், யுவதிகள் சிலர் இந்தப் பிரதேசத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.




# மழையால் வடக்கு மாகாணத்தில் 16 பாடசாலைகள் மூடப்பட்டன!

மழையுடனான வானிலை காரணமாக வட மாகாணத்திலுள்ள 16 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் 8 பாடசாலைகளும் வவுனியாவில் ஒரு பாடசாலையும் முல்லைத்தீவில் 7 பாடசாலைகளும் இவ்வாறு மூடப்பட்டுள்ளன என வட மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வானிலை சீரடைந்ததன் பின்னர் பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் என வட மாகாண ஆளுநர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, நிலவும் மழையுடனான வானிலை தற்காலிகமாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எனினும் வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை, மாத்தளை மாவட்டங்களிலும் மழை பெய்யலாம் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, பதுளை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.




# உயர்தர பரீட்சைக்கான ஏற்பாடுகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுதராதர உயர்தொ பரீட்சையை எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடையும் தறுவாயில் உள்ளன எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள 2,298 பரீட்சை நிலையங்களில் ஜனவரி 31ஆம் திகதி வரை உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

பரீட்சைக் கால அட்டவணைகள் மற்றும் அனுமதி அட்டைகள் என்பன பாடசாலை அதிபர்களுக்கும் தனியார் விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக் களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk எனும் இணையத்தளத்தின் மூலம் தங்களின் உரிய ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.



# ஆயிரத்து 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கடந்த வருடம் முதல் இதுவரையான காலப்பகுதியில் விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட 1,500 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் 5,000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டிலுள்ள 40 சிறிய வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# மின்சார சபையின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு இல்லை!

## வலுசக்தி அமைச்சர் தகவல்




இலங்கை மின்சார சபை ஊழியர்களின் இந்த வருடத்திற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தலைவர் உள்ளிட்ட பிரதானிகளுக்கு இந்தத் தீர்மானம் தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை மின்சார சபையின் நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு செலவினத்தை குறைக்கும் நோக்கில், கடந்த வருடங்களிலும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை.

2025ஆம் ஆண்டு முதல் 3 வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் 25 சதவீத கொடுப்பனவு அதிகரிப்பை தொடராதிருப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.




# உலக வங்கியிடம் இருந்து இலங்கைக்கு 25 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி

இலங்கைக்கான தமது நிதியுதவியின் இரண்டாவது தவணையாக உலக வங்கி மேலும் 25 கோடி அமெரிக்க டொலர்களை விடுவித்துள்ளது.

அரசாங்கத்தின் பாதீட்டுக்கு ஆதரவாக 50 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதற்கு கடந்த ஜூன் மாதம் உலக வங்கி அனுமதி வழங்கியிருந்தது.

பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான தாக்கங்களைத் தணிப்பதற்கும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இந்த நிதி உதவியின் கீழ் கடந்த ஜூன் மாதம் முதல் தவணையாக 25 கோடி அமெரிக்க டொலர்களை உலக வங்கி வெளியிட்டிருந்தது.




# போதைப் பொருள்களுடன் இருவர் சம்மாந்துறை பொலிஸாரால் கைது

**(பாறுக் ஷிஹான்)**

இரு வேறு சந்தர்ப்பங்களில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இருவரை மறித்து சோதனை மேற்கொண்டசம்மாந்துறைப் பொலிஸார் போதைப்பொருளுடன் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

நாடு முழுவதும் விசேட போதைப் பொருள் ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபரினால் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்ஜ. ஜயபத்மவின் ஆலோசனையில் சம்மாந்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜயலத் வழிகாட்டலில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஷ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது 6600 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 260 போதை தரும் மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவரும், 40 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் மற்றுமொரு சந்தேக நபரும் கைதாகினர்.

இச்சுற்றிவளைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சம்மாந்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.



### இரு பாடசாலை மாணவர்கள் உட்பட

# போதைப்பொருள் சந்தேக நபர்கள் 10 பேர் மூன்று நாள்களில் சாய்ந்தமருதில் சிக்கினர்

**(பாறுக் ஷிஹான்)**

இரு பாடசாலை மாணவர்கள் உட்பட 10 போதைப்பொருள் சந்தேகநபர்களை சாய்ந்தமருது பொலிஸார் கடந்த மூன்று நாள்களில் கைது செய்துள்ளனர்.

விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபரினால் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்குப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இது தொடர்பாக அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

சீருடை மற்றும் சிவில் உடையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழு கடந்த திங்கள் முதல் நேற்றுப் புதன்கிழமை வரையான 3 நாள்களில் 10 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளது.

இப்பொலிஸ் குழுவில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். எல். சம்சுதீன் வழிகாட்டலில் சப் இன்ஸ்பெக்டர் ரவூப் தலைமையில் ஹாரீஸ் (43537), முபாறக் (88489), அக்பர் (76442) ஆகியோர் பங்கேற்று சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வசம் இருந்து நாட்டு கஞ்சா, ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையின் போது நேற்றுப் புதன்கிழமை ஐஸ் போதைப்பொருள் நுகர்ந்த இரு பாடசாலை மாணவர்களை இப்பொலிஸ் குழுவினர் கைது செய்துள்ளனர். தரம் 9 மற்றும் தரம் 11 ஆண்டில் பாடசாலையில் கல்வி கற்கும் இம்மாணவர்கள் மாவடிப்பள்ளி பகுதியைச் சேர்ந்தவர்கள். 14 மற்றும் 16 வயதுடையவர்கள்.

மேலும் சாய்ந்தமருதுப் பகுதியில் பல்வேறு குற்றச்செயலுடன் தொடர்புபட்ட நிலையில் தலைமறைவாகி இருந்த 5 சந்தேக நபர்களும் இத்தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் விசேட போதைப் பொருள் ஒழிப்புக் குழு ஒன்றை அமைத்து அக்குழுவின் ஊடாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டல்களை வழங்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். போதைப்பொருளுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# யாழ் மாவட்டத்தில் ஒரே நாளில் மட்டும் புதிதாக 111 பேருக்கு டெங்குத் தொற்று

## இந்த மாதத்தில் இதுவரை 886 பேருக்கு பாதிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 886 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தற்போதய டெங்கு நிலமை தொடர்பில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் 111 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், யாழ் மாவட்டத்தில் காணப்படும் அரச நிறுவனங்களிலேயே அதிகளவில் டெங்கு பரவும் அபாயம் நிலவுவதாகவும், இதனைக் கருத்திற்கொண்டு நாளை அரச நிறுவனங்களில் விசேட டெங்கு கட்டுபாடு செயற்றிட்டம் முன்னெடுக்கபடவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# வவுனியாவில் வான்பாயும் 479 குளங்கள் உடைப்பெடுத்த 64 குளங்கள் அடைப்பு



**(கி.வசந்தரூபன்)**

வவுனியாவில் 479 குளங்கள் வான் பாய்கின்றன. இதுவரை 64 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால், பெரும்பாலான குளங்கள் வான் பாய்கின்றன.

குறிப்பாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 620 குளங்களில் 456 குளங்களும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 17 குளங்களும், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 06 குளங்களும் வான் பாய்கின்றன என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாலிக்குளம், சின்ன சிப்பிகுளம், தேகக்கம்குளம், பிரமநாலங்குளம், பறையனாளங்குளம் உட்பட 64 குளங்கள் உடைப்பெடுத்த நிலையில் கமநல அபிவிருத்தி திணைக்களம், இராணுவம், கிராமமக்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் இணைந்து இக்குளங்களை மறுசீரமைத்தமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 21.12.2023




உற்சாகமான ஆற்றலான போக்கை மேற்கொள்வதன் மூலம் நன்மை விளையும். பலனை எதிர்பார்காமல் உங்கள் கடமைகளை செய்தால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் ஏதுவானதாக இருக்காது. பணிகள் அதிகமாக காணப்படும். அசௌகரியங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்துப் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

உங்கள் குடும்ப வளர்சிக்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் செலவுகள் அதிகரிக்கும். சேமிப்பு குறையும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். உங்கள் போக்கில் நம்பிக்கை காணப்படும்.

பணியிடத்தில் எடுக்கும் சிறிய முயற்சி கூட பெரிய வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் பணிகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள்.

இன்று பணத்தை விரைவாக சம்பாதிப்பீர்கள் வங்கியிருப்பை சிறப்பாக பராமரிப்பீர்கள். ஊக்கத்தொகை மற்றும் போனஸ் போன்ற வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் சிறிது கவனம் செலுத்துவதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று சிறப்பான நாள். ஸ்திரமாக இருக்கும். பயனுள்ள முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அது நல்ல பலன் அளிக்கும்.

உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கு சிறந்த வாய்ப்பு கிடைக்கும். இன்று நீங்களும் பொறுப்புகளை சமாளிப்பீர்கள்.

நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலும். இதனால் இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை வேறு நாளைக்கு தள்ளிப் போடவும். பொதுவான நலனுக்கென நீங்கள் சில தரத்தை பராமரிக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். நல்ல செயல்திறனுடன் பணியாற்ற நீங்கள் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று நீங்கள் சிறிது உணர்ச்சி வசப்படுவீர்கள். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படாது. எனவே அதிக செலவுகளை செய்ய வேண்டாம்.

இன்று நீங்கள் சில ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர் கொள்வீர்கள். கால் வலி காணப்படும். என்றாலும் நீங்கள் ஆரோக்கியத்தை பராமரிபீர்கள்.




இன்று நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். எனவே நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் விரும்பத்தகாத தருணங்களை எதிர்கொள்ள நேரலாம்.

நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது நல்லது. உங்கள் துணையுடன் வெளிப்படையாக வும் நட்புடனும் பழக வேண்டும்.

இன்று பண வரவிற்கு உகந்த நாள் அல்ல. இன்று திட்டமிட்டு பணத்தை கையாள்வதன் மூலம் பண இழப்பு ஏற்பட்மல் பார்த்துக் கொள்ளலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். வயிற்று வலி மற்றும் அஜீரணக் கோளாறுகளால் பாதிப்பு ஏற்படும்.




இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். புதிய தொடர்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். பொது நிகழ்ச்சிகளின் பங்கேற்பு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

பணிகளைக் கையாளும் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நீங்கள் செய்யும் பணியை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் வெளிப்படையாக கருத்துக்களை பரிமாறிக் கொள்வீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணத்தை சிறப்பாக பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணவரவும் லாபமும் காணலாம்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இந்த நாள் உங்களுக்கு சிறப்பான நாள். எனவே பெரிய அளவில் யோசித்து எந்த வாய்ப்பு வந்தாலும் அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப்பாக நடக்கும். நீங்கள் சிறந்த வளர்ச்சி காண்பீர்கள். உங்களுள் இருக்கும் திறமை மூலம் பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் அனைத்து விஷயங்களையும் நகைச்சுவை உணர்வோடு எற்றுக் கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். சுதந்திரமாக இருக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தை பராமரிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு உங்களிடம் காணப்படும்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் பொறுமை காக்க வேண்டும். இன்று சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும்.

இன்று பணியில் திருப்தி காணப்படாது. நீங்கள் சமாளித்து பணிகளை ஆற்ற வேண்டும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

நீங்கள் இன்று குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடனான புரிந்துணர்வு குறைந்து காணப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. இன்று பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

அதிக சிந்தனை காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.12.2023




இன்று நீங்கள் பதட்டத்தை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். வளர்ச்சி குறித்த உங்கள் முயற்சிகளில் முன்னேறிச் செல்லுங்கள்.

அதிகப் பொறுப்புகள் காரணமாக உங்களுக்கு பதட்டம் அதிகரிக்கும். சக பணியாளர்களுடனான உறவில் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் மனதில் நம்பிக்கையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிதி நிலைமையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். உங்கள் நிதி நிலையை பாதுகாக்க நீங்கள் முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியை மேற்கொள்ளுங்கள்.லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் செயல்களை சீராக மேற் கொள்ள நீங்கள் மிகவும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று நீங்கள் நம்பிக்கை இழப்பீர்கள். எனவே உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணி யாளர்களுடன் கவனமாக உறவாட வேண்டும்.

சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழப்பீர்கள். இது உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் சுமூகமாக நடந்து கொள்வது நல்லது.

நிதி நிலைமை சீராக இருக்காது. இன்று உங்கள் நிதிநிலையை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மருத்துவரிடம் சென்று கண் பரிசோதனை மேற் கொள்வது சிறந்தது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் நாள். உங்களின் அமைதியான மனநிலை காரணமாக நீங்கள் இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதி காரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மறை எண்ணங்களை பகிர்ந்து கொள்வதற்கு சிறந்த நேரம். நீங்கள் இருவரும் உங்களின் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர் கள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் நிதி வளர்ச்சியை கணிசமாக மேம்படுத்துவீர்கள்.

இன்று உங்களுக்கு ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் அனைத்து நடவடிக்கை களிலும் வெளிப்படையாக இருங்கள். உங்கள் மனதில் குழப்பத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். அனைத்து செயல்களையும் கவனமாக திட்டமிட்டு, முடிவெடுத்து மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணியில் திருப்தி காணப்படாது. பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று பொழுது போக்குவதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்க முயலுங்கள். இதனால் உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை ஒரு பிரச்சினையாக காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# 6 மாதங்களுக்குள் போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்யலாம்!

## பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நம்பிக்கை

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம்நாள் சுற்றிவளைப்புகளில் 2 ஆயிரத்து 296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே எதிர்வரும் 6 மாதங்களுக்குள் நாட்டில் போதைப்பொருள் பாவனையை முற்றாக இல்லாமல் செய்ய முடியும் எனப் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முப்படைகளின் ஒத்துழைப்புடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம் சுற்றிவளைப்புகளில் 2 ஆயிரத்து 296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 6 ஆயிரத்து 583 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றுள் செவ்வாய்க்கிழமை இரவு புளுமெண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் ஹெரோயின், ஐஸ் போதைப்பொருளை தம் வசம் வைத்திருந்தமை, சட்டவிரோத மதுபானம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஹொரணைப் பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொரியர் சேவையூடாக போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்து வந்த யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சியம்பலாவெள பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கோப்பாய் பிரதேசத்தில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து இதன் போது வெவ்வேறு வகையான போதைப் பொருள் மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன்ச். மேலும் 18 ஆயிரம் போதைப்பொருள் மாத்திரைகளுடன் மீனவர்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 109 பேருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது. 14 சந்தேக நபர்கள் தொடர்பில் சட்டவிரோத சொத்து குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 184 பேர் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் தேடப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 218 சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இதன்போது 1 கிலோ 170 கிராம் ஹெரோயின், 648 கிராம் ஐஸ், 11 கிலோ 600 கிராம் கஞ்சா, 46 கிலோ 285 கிராம் மாவா மற்றும் 19,507 போதைப்பொருள் மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுமாயின், ஜனவரி முதலாம் திகதி முதல் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளில்ஈடுபடவுள்ளதாகஅரசவைத்தியஅதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுவில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.